## இந்தியாவை பீடித்திருக்கும் நோய்களில் ஒன்று குஜராத் மாடல்!

# பா.ஜ.க. இதை வைத்து இனி கரையேற முடியாது!

## ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் விமர்சனம்!

சென்னை, மே 9-

சமூக, பொருளாதார அடிப்படையிலான வளர்ச்சி பெண்கள் முன்னேற்றம், ஏழை எளிய மக்களுக்கான அடிப்படை வசதிகள் என அனைத்தும் சார்ந்தே ஒரு மாடல் அரசை உருவாக்கிட இயலும். அந்த வகையில் குஜராத் மாடல் என்கிற கட்டுக் கதையை வைத்து பா.ஜ. இனி கரையேற முடியாது என ‘தினகரன்’ நாளேடு 8.5.2023 தேதியிட்ட இதழில் ‘தி குஜராத் ஸ்டோரி’ என்ற தலைப்பில் தலையங்கம் வெளியிட்டுள்ளது.


தினகரன்
மே 8, 2023 திங்கட்கிழமை
தி குஜராத் ஸ்டோரி
இந்தியாவை பீடித்திருக்கும் நோய்களில் ஒன்றாக கருதப்படுவது குஜராத் மாடல் வளர்ச்சி என்பதாகும். கடந்த 15 ஆண்டுகளுக்கு முன்பு நாடு முழுவதும் ஓங்கி ஒலித்த குஜராத் மாடல் வளர்ச்சி என்கிற கட்டுக்கதை, தேசத்தை பாஜ பக்கம் திருப்பியதில் சந்தேகமில்லை. குஜராத்தில் அதிக வளர்ச்சி, பன்னாட்டு நிறுவனங்கள் அங்கு படையெடுத்த விதம், திறமையான, ஊழலற்ற ஆட்சி என்கிற பிம்பம் நாடு முழுவதும் கட்டமைக்கப்பட்டது. இதன் விளைவு பிரதமர் மோடி தலைமையில் பாஜ தனிப்பெரும்பான்மையுடன் ஆட்சியை

அது வருமாறு:-

இந்தியாவை பீடித்திருக்கும் நோய்களில் ஒன்றாக கருதப்படுவது குஜராத் மாடல் வளர்ச்சி என்பதாகும். கடந்த 15 ஆண்டுகளுக்கு முன்பு நாடு முழுவதும் ஓங்கி ஒலித்த குஜராத் மாடல் வளர்ச்சி என்கிற கட்டுக்கதை, தேசத்தை பா.ஜ. பக்கம் திருப்பியதில் சந்தேகமில்லை. குஜராத்தில் அதிக வளர்ச்சி, பன்னாட்டு நிறுவனங்கள் அங்கு படையெடுத்த விதம், திறமையான, ஊழலற்ற ஆட்சி என்கிற பிம்பம் நாடு முழுவதும் கட்டமைக்கப்பட்டது. இதன் விளைவு பிரதமர் மோடி தலைமையில் பா.ஜ. தனிப்பெரும்பான்மையுடன் ஆட்சியை கைப்பற்றவும் அது உதவியது.

ஆனால் குஜராத்தில் அவர்கள் கட்டமைத்த தோற்றம் காலப்போக்கில் அது ஒரு மாயை என்பதை மக்கள் உணர்ந்து கொண்டனர். வாக்களித்த கோடிக்கணக்கான மக்களுக்கு பெட்ரோல் விலை உயர்வும், சிலிண்டர் விலை உயர்வுமே பரிசாக கிடைத்தன. அம்பானி, அதானிகள் தங்கள் வளத்தை பெருக்கி கொள்ளவும், சாமானிய மக்கள் சாப்பாட்டுக்கே திண்டாடும் நிலை உருவானதை இன்று அனைவருமே அறிகிறோம். பீகார், உ.பி. உள்ளிட்ட மாநிலங்களில் இன்று பொருளாதார வளர்ச்சி மிகவும் குறைவாகவே உள்ளது.

குஜராத் மாடல் என்கிற போலி புகழாரத்தை சூட்டிக் கொண்டு, வெகுகாலம் பயணிக்க முடியாது என்பதை இப்போது உணர தொடங்கியுள்ளது. குஜராத்தில் மட்டுமே கடந்த 5 ஆண்டுகளில் 40 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பெண்கள் மாயமான திடுக்கிடும் தகவல் இப்போது வெளியாகியுள்ளது. தேசிய குற்றப்பதிவு ஆவண காப்பகத்தின் புள்ளி விவரங்களின்படி குஜராத்தில் கடந்த 2016 தொடங்கி 2020 வரையில் 41 ஆயிரத்து 621 பெண்கள் மாயமானதாக தகவல் உறுதிப்படுத்தப்பட்டு உள்ளது. கடந்த 2019-20ல் அகமதாபாத், வதோரா மாவட்டங்களில் மட்டுமே 4 ஆயிரத்து 722 பெண்கள் மாயமாகியுள்ளனர். பதின்மபருவ சிறுமிகளும், இளம்பெண்களும் குஜராத்தில் இருந்து வேறு மாநிலங்களுக்கு கடத்தப்பட்டு பாலியல் தொழிலில் ஈடுபடுத்தப்படுவதாகவும், காவல்துறை சார்பில் அதை கண்டுபிடிக்க எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனவும் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெண்களை பறிகொடுத்துவிட்டு குஜராத்தில் பல குடும்பங்கள் செய்வதறியாமல் நிலை குலைந்து நிற்கின்றன. கேரளாவில் பல பெண்கள் கடத்தப்பட்டு தீவிரவாத அமைப்புகளில் சேர்க்கப்படுவதாக கேள்வி எழுப்பும் பா.ஜ.வினர், தங்கள் கோட்டையான குஜராத்தில் பெண்கள் மாயமாவது குறித்து வாய் திறந்து பேசுவது கூட கிடையாது. பெண்களுக்கு குறைந்தபட்ச பாதுகாப்பு இல்லாத ஒரு மாநிலம், வளர்ச்சிக்கான ஒரு மாடலை எப்படி உருவாக்கிட முடியும் என எதிர்க்கட்சிகள் தரப்பில் கேள்விகள் முன் வைக்கப்படுகின்றன.

உண்மையில் தனிநபர் வருமான உயர்வை தவிர குஜராத்தில் வேறு ஒன்றும் சொல்வதற்கு இல்லை. பெண்களின் உயர்கல்வி என எடுத்து கொண்டால் கூட தமிழ்நாட்டில் 80 சதவீதம் எனில், குஜராத்தில் 35 சதவீதமாக உள்ளது. தமிழ்நாட்டில் ஆயிரம் பேருக்கு 4 டாக்டர்கள் என்றால், குஜராத்தில் ஆயிரம் பேருக்கு ஒரு டாக்டரே உள்ளார். சமூக, பொருளாதார அடிப்படையிலான வளர்ச்சி பெண்கள் முன்னேற்றம், ஏழை எளிய மக்களுக்கான அடிப்படை வசதிகள் என அனைத்தும் ‘சார்ந்தே ஒரு மாடல் அரசை உருவாக்கிட இயலும். அந்த வகையில் குஜராத் மாடல் என்கிற கட்டுக் கதையை வைத்து பா.ஜ. இனி கரையேற முடியாது.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.



தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் தமிழ்நாடு “அரசின் ஈடில்லா 2ம் ஆண்டு ஆட்சி,ஈராண்டே சாட்சி” என்ற அடிப்படையில் 2ம் ஆண்டு சாதனை ”திராவிட மாடல்ஆட்சியை முன்னிட்டு மாவட்ட ஆட்சியர் துரை ராமச்சந்திரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் பங்கேற்று 875 பயனாளிகளுக்கு ரூபாய் 8.10 கோடி மதிப்பில் நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் தென்காசி தெற்கு மாவட்டச் செயலாளர் பொ.சிவபத்மநாதன், தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ராஜா எம்.எல்.ஏ, பழனி நாடார் எம்.எல்.ஏ. சதன் திருமலைகுமார் எம்.எல்.ஏ. சாதிர்,சேக்அப்துல்லா உள்பட பலர் உள்ளனர்.

## வாரியத்தலைவராக அமைச்சர் கயல்விழி செல்வராஜ் நியமனம்!

# தூய்மைப் பணியாளர் நல வாரியம் திருத்தி அமைப்பு!

## தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

சென்னை, மே 9

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் 08.07.2021 அன்று நடைபெற்ற ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை ஆய்வுக் கூட்டத்தில், தூய்மைப் பணிபுரிவோர் நலவாரியத்தில் புதிய உறுப்பினர்களை நியமித்து வாரியம் திருத்தியமைக்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டதன் அடிப்படையில், தூய்மைப் பணியாளர்கள் நல வாரியத்திற்கு ஓர் உப தலைவர், 14 அலுவல் சார்ந்த உறுப்பினர்கள் மற்றும் புதிய 12 அலுவல் சாரா உறுப்பினர்களைக் கொண்டு இவ்வாரியத்தை திருத்தி அமைத்து அரசாணை (நிலை) எண்.61. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல (ஆதிந.6)த்துறை, நாள். 03.05.2023 -இல் ஆணையிடப்பட்டது.

அதில் தமிழ்நாடு தூய்மை பணியாளர் நல வாரியத்தின் தலைவராக அமைச்சர் கயல்விழி செல்வராஜ் நியமிக்கப் பட்டுள்ளார்.

உப தலைவர், இவர்களை தொடர்ந்து 14 புதிய அலுவல் சார்ந்த உறுப்பினர்களையும் 12 அலுவல் சாரா உறுப்பினர்களையும் அரசு நியமித்துள்ளது.

### திருமுக்கூடலில் தார் சாலை அமைக்கும் பணி க.சுந்தர் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்

காஞ்சிபுரம், மே 9 -

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம், திருமுக்கூடல் புல்லம்பாக்கம் வயலக்காவூர் இடைய 4 கோடியே 45 லட்சம் மதிப்பில் புதிதாக தார் சாலை அமைக்கும் பணியை காஞ்சி தெற்கு மாவட்ட செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்.

இதில் க. செல்வம் எம்.பி. சாலவாக்கம் ஒன்றிய செயலாளர் தி.குமார், ஊராட்சி மன்ற தலைவர் முருகன், மஞ்சுளா திருமுக் கூடல் அவைத் தலைவர் என்.எஸ்.ரவி, துணைச் செயலாளர் ஞான சேகரன், மாவட்ட கவுன்சிலர் கோ.சிவராமன், பாபு. ஒன்றிய பொருளாளர் பி. வெ.பாலமுருகன், ஒன்றிய கவுன்சிலர் அன்புராஜ் , துணைத் தலைவர் சீனிவாசன். தலைவர் சுப்பிரமணி , சுதாலட்சுமி செல்வகுமார். கிளைச் செயலாளர் உதயகுமார், சண்முகம், செயல் அறிஞன். மற்றும் நெடுஞ்சாலை துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

## தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக தொ.மு.ச.

# (திருச்சி மண்டலம்) மத்திய சங்க நிர்வாகிகள்!

## தொ.மு.ச. பேரவை அறிவிப்பு!

தொ.மு.ச. பேரவையில் இணைந்து செயல்பட்டு வரும் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக தொ.மு.ச. (திருச்சி மண்டலம்) (பதிவு எண். 609/TRY, பேரவை இணைப்பு எண். 475) மத்திய சங்க நிர்வாகிகள் தேர்தல் 05.05.2023 அன்று மேலிடப் பார்வையாளராக வழக்கறிஞர் அ.சரவணன் மேற்பார்வையில் பேரவைச் செயலாளர் கோ.சி.வள்ளுவன் அவர்களை ஆணையாளராகக் கொண்டு நடைபெற்றது. இத்தேர்தலில் கீழ்க்கண்டவர்கள் மத்திய சங்க நிர்வாகிகளாக வெற்றி பெற்றுள்ளனர்.

**மத்திய சங்க நிர்வாகிகள்**

| | |
|---|---|
| தலைவர் | - டி. சேகர் |
| துணைத் தலைவர்கள் | - 1) வி.அன்பழகன், 2) ஏ. கலைவாணன், 3) பி. கண்ணன், 4) எஸ். சங்கர்கணேஷ், |
| பொதுச்செயலாளர் | - பி. குணசேகரன் |
| கோட்டச்செயலாளர்கள் | - 1) எம். இளங்கோவன், 2) ஆர். நாராயணசாமி, 3) வி. தெய்வீகன் |
| அலுவலகச் செயலாளர் | - ஏ. கனகசபை |
| பொருளாளர் | - எஸ். அப்பாவு |

இடம் : கலைஞரகம்
நாள் : 08.05.2023

**மு.சண்முகம், எம்.பி.**
பொதுச் செயலாளர், தொ.மு.ச. பேரவை

## திருநீர்மலை த.ஜெயக்குமார் தலைமையில்

# பம்மல் வடக்குப் பகுதியில் சாதனை விளக்கப் பொதுக்கூட்டம்!

## டி.ஆர்.பாலு எம்.பி. - அமைச்சர் தா.மோ.அன்பரசன் - கோவி.லெனின் சிறப்புரை!

காஞ்சிபுரம், மே 9-

தாம்பரம் மாநகரம், பம்மல் வடக்கு பகுதி தி.மு.க. சார்பில் திராவிட மாடல் அரசின் இரண்டாண்டு சாதனை விளக்கப் பொதுக்கூட்டம் இன்று (9.5.2023 - செவ்வாய்க்கிழமை) மாலை 6 மணியளவில் திருநீர்மலை, 30வது வார்டு, துர்கா நகரில் நடைபெறுகிறது.

இப்பொதுக்கூட்டத்திற்கு பகுதிச் செயலாளர் திருநீர் மலை த.ஜெயக்குமார் தலைமை வகிக்கிறார்.

கே.சந்திரன், எஸ்.கே. நெப்போலியன், மு.ஸ்ரீதர், க.ஜெயசீலன், ஜி.பப்பிதா, ச.பிரபு, சி.பார்த்தசாரதி, இரா.குமரேசன், இரா. பாபுஜி, க.சுந்தரமூர்த்தி ஆகியோர் முன்னிலை வகிக்கின்ற னர்.

துணை மேயர் கோ.காமராஜ், இரா.நரேஷ்கண்ணா ஆகியோர் வரவேற்கின்றனர்.

இப்பொதுக்கூட்டத்தில் ‘நக்கீரன்’ பொறுப்பாசிரியர் கோவி.லெனின், கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., அமைச்சர் - மாவட்டச் செயலாளர் தா.மோ. அன்பரசன் ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

இக்கூட்டத்தில் இ.கருணாநிதி எம்.எல்.ஏ., எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ., மேயர் க.வசந்தகுமாரி, வே. கருணாநிதி, ப.அன்பழகன், க.மோகன், மு.நி.தமிழ்குமரன், ப.ஆண்டவன், இ. பாலாஜி, டி.எம்.ஜோசப், கலை வாணி பிரபு, வாணிஸ்ரீ விஜயகுமார், சித்ரா தமிழ் குமரன், சண்முகசுந்திரி குமார், சித்ராதேவி முரளிதரன் உள்ளிட்ட மாவட்ட, பகுதி, வார்டுக் கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள், கழகச் செயல்வீரர்கள் திரளாகப் பங்கேற்கின்றனர்.




பூவிருந்தவல்லி மேற்கு ஒன்றிய திமுக சார்பில் திராவிட மாடல் அரசின் இரண்டு ஆண்டு சாதனை விளக்க பொதுக்கூட்டம் கொசவன்பாளையம் ஊராட்சியில் ஒன்றியச் செயலாளர் டி.தேசிங்கு தலைமையில் நடை பெற்றது. இதில் மாவட்ட செயலாளரும், பால்வளத் துறை அமைச்சருமான ஆவடி சா.மு.நாசர் சாதனைகளை விளக்கி பேசினார். உடன் சட்டமன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி, பேச்சாளர் ஜெ.சாமுவேல் தங்கம், நிர்வாகிகள் கே.ஜெ.ரமேஷ், ம.ராஜி, பொதுக்குழு உறுப்பினர்கள் ஜெ.மகாதேவன், காஞ்சனா சுதாகர், ப.ச.கமலேஷ், தி.வே.முனுசாமி தி.வை.ரவி, ஒன்றிய குழு துணைத் தலைவர் பரமேஸ்வரி கந்தன், ஊராட்சி மன்ற தலைவர் சி.அண்ணாகுமார், ஒன்றிய கவுன்சிலர் வழக்கறிஞர் என்.பி.மாரிமுத்து, ஒன்றிய நிர்வாகிகள் இ.கந்தபாபு, ஜெ.சாக்ரடீஸ், ஜி.சுகுமார், ப.கந்தன், கட்டத்தொட்டி எம்.குணசேகரன், ஜி.சி.சி.கருணாநிதி, நடுகுத்தகை கே.சுரேஷ்குமார், எம்.மோகன். வெள்ளவேடு கே.கோபிநாத், இ.வி.பி.பிரதீப் துணைத் தலைவர் லல்லி பாபு, ஜி.பி.பரணிதரன், எஸ்.ராமகிருஷ்ணன் வழக்கறிஞர் டி.மகா, டி.சகாயம், கே.சுப்பிரமணி, ஆர்.செந்தாமரை, ராஜேஷ், தே.அருண்குமார், எம்.விக்னேஸ்வரன், இ.அமுதன்,எம்.ஏழுமலை உள்பட பலர் உள்ளனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## கோவை மு.இராமநாதன்
## மே 9 (2019)



தனது பள்ளிப்பருவத்திலேயே திராவிடர் கழகத்தில் உறுப்பினராக இணைத்துக் கொண்ட இவர், கழகம் துவங்கிய போது தன்னை இணைத்துக் கொண்டு, தனது பேச்சாற்றலால் இயக்க கொள்கைகளை 58 ஆண்டுகளாக தமிழகம் முழுவதும் பரப்பி, கழகம் வளர பாடுபட்டவர்.

கழகத்தில் பொதுக்குழு உறுப்பினராகவும் – கோவை மாநகரச் செயலாளராகவும் – சட்டதிட்டத் திருத்தக்குழு உறுப்பினராகவும் – தணிக்கைக்குழு உறுப்பினராகவும் – உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்தவர்.

தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும் – இரண்டு முறை சட்டமன்ற உறுப்பினராகவும்– நாடாளுமன்ற உறுப்பினராகவும் பொறுப்பு வகித்தவர்.

கழகம் தொடங்கிய அடுத்த ஆண்டிலேயே இரயில் நிலையங்களில் இந்தி எழுத்துக்களை தார்பூசி அழிக்கும் போராட்டம் – 1965ல் இந்தி எதிர்ப்பு போராட்டம் – 1976ல் நெருக்கடிகால மிசா சட்டத்தில் 14 மாத கால சிறைவாசம் என கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

1992ஆம் ஆண்டு தலைமைக் கழகத்தின் சார்பில் “அண்ணா விருது”முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் வழங்கப்பட்டது.

“திராவிட இயக்கத்தினுடைய ஒரு மிகப்பெரிய பல்கலைக்கழகமாக விளங்கிய இவர், தன்னுடைய கடைசி மூச்சு நிற்கும் வரையிலும், கழகம் – கழகம் – கழகம், கலைஞர் – கலைஞர் – கலைஞர் என்ற நிலையில் தான் வாழ்ந்து காட்டியிருக்கின்றார். அவருடைய மறைவு ஒட்டுமொத்த திராவிட இயக்கத்திற்கும், தி.மு.கழகத்திற்கும் ஒரு மிகப்பெரிய இழப்பாகும்” என கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது இரங்கலில் குறிப்பிட்டுள்ளார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

### கிரிக்கெட் சேப்பாக்கத்தில் போக்குவரத்து மாற்றம்!

சென்னை, மே 9 -

சேப்பாக்கம் மைதானத்தில் வரும் மே 10, 14, 23 மற்றும் 24ம் தேதிகளில் நடைபெறவுள்ள ஐபிஎல் போட்டிகளின் காரணமாக, போட்டி முடிவதற்கு அரை மணி நேரத்திற்கு முன்பு போக்குவரத்து மாற்றங்கள் செய்யப்படவுள்ளதாக போக்குவரத்து காவல் துறை தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக சென்னைப் பெருநகர போக்குவரத்துக் காவல்துறை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: ஐபிஎல் போட்டிகள் எம்.ஏ. சிதம்பரம் ஸ்டேடியத்தில் 10.05.2023, 14.05.2023, 23.05.2023 மற்றும் 24.05.2023 ஆகிய தேதிகளில் நடைபெற உள்ளன. இப்போட்டி நடைபெறும் நாட்களில் போக்குவரத்தினைக் கட்டுப்படுத்த, போட்டி முடிவதற்கு அரை மணி நேரத்திற்கு முன்பு பின்வரும் போக்குவரத்து மாற்றங்கள் செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. போர் நினைவிடத்தில் இருந்து வெளிச்செல்லும் அனைத்து வாகனங்களும் வாலாஜா பாயின்ட் வழியாக கொடிமரச் சாலை வழியாக அவர்களது இலக்கை அடையலாம்.


காந்தி சிலையில் இருந்து உழைப்பாளர் சிலை நோக்கி உள்வரும் வாகனங்கள் அனைத்தும் காந்தி சிலை அருகே திருப்பி விடப்பட்டு ஆர்.கே.சாலை வழியாக சென்று அவர்களது இலக்கை அடையலாம்.




நாள் : 09.05.2023 செவ்வாய்கிழமை
நேரம் : மாலை 6.00 மணி
இடம் : பட்டாபிராம் ஆட்டோ ஸ்டான்டு, மேம்பாளம் அருகில்

திருவள்ளூர் மத்திய மாவட்டம்
ஆவடி மாநகர மேற்கு பகுதி தி.மு.க சார்பில்

மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர்
கழக தலைவர்
தலைமையிலான
திராவிட மாடல் அரசின் இரண்டு ஆண்டு
சாதனை விளக்க
மாபெரும்
பொதுக்கூட்டம்



தலைமை
பொன்.விஜயன் Ex MC
ஆவடி மேற்கு பகுதி கழக செயலாளர்

முன்னிலை
சன்.பிரகாஷ் — ஆவடி மாநகர பொறுப்பாளர்
G.உதயகுமார் — ஆவடி மாநகர மேயர்

வரவேற்புரை
ஆவடி மேற்கு பகுதி நிர்வாகிகள்
து.சௌந்தர், மா.சேகர், D.தரணி, சந்திரா டில்லிபாபு, பு.கிருஷ்ணமூர்த்தி, J.முரளி, R.கருணாகரன், V.சதீஷ்குமார், கோபி (எ) கோபாலகிருஷ்ணன், லெதர் ரவி

சிறப்புரை
மாண்புமிகு. ஆவடி.சா.மு.நாசர்
திருவள்ளூர் மத்திய மாவட்ட செயலாளர் ■ பால்வளத்துறை அமைச்சர்
தமிழ் சாதிக்
தலைமை கழக பேச்சாளர்
ஆ.கிருஷ்ணசாமி B.A., B.L., Ex MP, MLA
தலைமை செயற்குழு உறுப்பினர் ■ மாநில ஆதி திராவிட நலக்குழு செயலாளர்

V.அம்மு — ஆ.மா.1வது.ம.தலைவர்
ஆவடி சா.மு.நா.ஆசிம்ராஜா — பணிகள் குழு தலைவர் ஆவடி மாநகராட்சி

நன்றியுரை... S.Y.தாஸ் — 17 வது வட்ட கழக செயலாளர்
R.கருணாகரன் — 16 வது வட்ட கழக செயலாளர்

M.A.Design காஞ்சிபுரம் Cell : 99 44 786 613

ஆவடி மாநகர மேற்கு பகுதி தி.மு.க